# தமிழ் இலக்கியத்தில் அறம்

திருமதி. வெ.லீலாவதி

உதவிப் பேராசிரியர், ரெமோ சர்வதேச கல்லூரி, ஆலந்தூர்

**முன்னுரை -** சங்க இலக்கியங்கள் என்பது மூன்று சங்க காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்கள் ஆகும். தமிழர்கள் எப்பொழுதுமே ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். உலகம் போற்றும் வண்ணம் நம் தமிழர்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சங்க காலப் புலவர்கள் அறநெறிக் கருத்துக்களை தம் பாடல்களில் எழுதப்பட்டுள்ளது. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியின் முழுநிறை வடிவமே அறம். வீரத்தை போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. அறம் செய்வதை உயிருக்கு மேலாக கருதியவர்கள் தான் தமிழர்கள். பழங்காலத்தில் தமிழர்கள் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர். இவ்வாழ்க்கையையே அறவாழ்க்கையாக் கொண்டிருந்தனர். தமிழர்கள் தன்னலம் துறந்து பொதுநலத்தை உயிரினும் மேலாகக் கருதினார்கள். தம்மிடம் வந்து இரந்த எளிய மக்களுக்கு இல்லை என்று கூறும் அவச் சொல்லைக் கூறுவதை தாழ்வாகக் கருதினார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவுகளாகப் பிர்க்கப்பட்டு ஒரு வரையறுக்குள் வாழ்வியலைக் கொண்டு வாழ்ந்து பண்பாடு, கலாச்சாரம், அறநெறியுடன் வாழ்ந்தார்கள் எனபதனை தமிழ் இலக்கியங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## 1. வள்ளுவர் காட்டும் அறம்

ஒருவர், பொறாமை, பேராசை, கடுஞ்சொல் மற்றும் கோபம் இந்த நான்கையும் தன்னுடைய வாழ்நாளில் வராமல் கடைபிடித்து வாழ்பவனே அறவழியில் வாழ்ந்து வருகிறான் என்பதனை

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்**
**நான்கும் இழுக்கா இயன்றது அறம்”. (குறள் : 35)**

என்ற குறளின் வழி அறியலாம். மேலும் கிடைத்ததை பகுத்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களைக் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும் என்பனை

**“பகுத்துண்டு பல்லுயிர் ஒப்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”. (குறள் : 322)**

என்ற குறள் உணர்த்துகிறது.

## 2. ஔவையார் ஆத்துதிச்சூடி காட்டும் அறம்

எந்த ஒரு செயல் செய்தாலும் அதனை விரும்பி தான் செய்ய வேண்டும். நமக்கு விருப்பம் இருந்தால் தான் அதற்காக நேரம் செலவு செய்வோம். பணம் செலவு செய்வோம். எது எல்லாம் நமக்கு விருப்பமோ அது நமது சிந்தனையில் இருக்கும். நாம் விரும்பினால் மகிழ்ச்சியாக செய்வோம் என்று ஔவையார் விளக்குகிறார். இங்கு ஔவையார் கூறும் விளக்கம் விருப்பத்துடன் செய்ய வேண்டும். அறம் என்றால் தானம், தர்மம் என்ற பொருள் மட்டுமல்ல அறவழியில் நின்று தன் வாழ்நாளில் ஒழுக்கத்தை கடைபிடித்து வாழ்வது.

**அறம் செய்ய விருமப்பு (ஆத்திச்சூடி)**

## 3. சிலப்பதிகாரம் கூறும் அறம்

ஆட்சி செய்வதில் தவறிழைத்தவர்களை அறம் தண்டிக்கும். ஊழ்வினை விடாது பற்றியும், கற்புடைய பெண்டிரை உயர்ந்தவர்கள் இது போன்ற அறம் சார்ந்த கருத்துக்களை கீழ்க்கண்ட விகள் சுட்டிக் காட்டுகிறது.

**“அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்”**

என்ற வரிகளின் மூலம் அறத்தின் சிறப்புகளை இளங்கோவடிகள் விளக்குகிறார்.



DOI: 10.30726/ijlca/v12.i3.2025.123003

## 4. நாலடியார் கூறும் அறம்

அழகும் இளமையும் மிகுந்த செல்வம் ஒருநாள் அழிந்துவிடும். காலம் செல்லச் செல்ல இவையும் சென்று விடும் என்பது இயற்கை நியதி. செல்வத்தின் மூலம் நற்செயல்கள் எதையும் செய்யாமல் வீணாக காலத்தை கழிப்பவனுடைய வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கை என்று கூறுவது தவறாகும். இவ்வாறு வாழ்பவனுடைய வாழ்வு வாழ்ந்தாலும் விழுந்ததற்கு சமம் என்று நாலடியார் கூறுகிறார்.

**"உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்டும்**
**ஒருவாழி நில்லாமை கண்டு – ஒருவழி**
**ஒன்றேயும் இல்லாதவன் வாழ்க்கை உடம்(பு)**
**இட்டு நின்று வீழ்ந்தக்க(து) உடைத்து"**
**(நாலடியார் -39)**

## 5. மணிமேகலை கூறும் அறம்

மனிதனுடைய அன்றாட தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றில் பூர்த்தி செய்து வாழ வேண்டும். அதனை நல்ல வழியில் பெற்று இல்லாதவர்கள் கொடுத்து வாழ வலியுறுத்த வேண்டும் என்பதனை அறமெனப்படுவது என்ற வரிகளின் மூலம் உணர்த்துகிறார் சீத்தலைசாத்தனார்.

**"அறமெனப்படுவது யாதெனக் கேடபின்**
**மறவா திதுகேள் மண்ணுயிர் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டதில் ஆபுத்திரனோடு மணிபல்லவம்**
**அடைந்த காதை" – (228-23) மணிமேகலை**

## 6. சிறுபஞ்சமூலம் கூறும் அறம்

நமக்கு சிறுபஞ்சமூலம் என்ன சொல்கிறது என்றால் ஐயந்து செயல்கள் செய்பவர்கள் அறநெறியில் செல்பவர்கள் என்று கூறுகின்றது. ஒன்று குளம் வெட்டுகிறவன். இரண்டு நீர் வழிந்து ஓட வாய்க்காலமைப்பவன், மூன்று புது கிணறு அமைப்பவன், நான்கு விளைநிலம் உருவாக்குபவன், ஐந்து மரத்தினை நடுபவன் இந்த ஐந்து செயல்கள் என்று சிறுபஞ்சமூலம் நமக்கு விளக்குகிறது.

சங்க இலக்கியங்களில் அறம் என்று பார்த்தோமானால் சங்க வாழ்க்கையில் எது உயர்வான பண்பாடேத, அதுவே அறமாகப் பார்க்கப்பட்டது. "அகம்" சார்ந்த வாழக்கை காதலைப் பற்றியும் "புறம்" சார்ந்த வாழ்க்கை வீரத்தை பற்றியும் பேசக் கூடியது. அகவாழ்க்கையில் தோழி தலைவியின் இரகசியத்தை காப்பாற்றுவது அதே போல தலைவியின் காதலுக்கு உண்மையாக இருப்பது போன்றவற்றை தொல்காப்பியர் அறத்தோடு நின்றல் என்று குறிப்பிடுகிறார். அதன் பின்பு வந்த பக்தி இலக்கிய கால கட்டத்தில் பக்தியினால் மக்களின் சிந்தனை மழுங்கடிக்கப் பட்டது. அறம் பற்றி மக்கள் சிந்திக்கவில்லை. மீண்டும் மக்கள் பக்தியிலிருந்து பகுத்தறிவை நோக்கி எழுச்சி பெறத் தொடங்கிய காலத்தில் பகுத்தறிவின் இலக்கும் சமூகப் பொறுப்பும் இலக்கியத்தின் அறமாகக் கட்டமைத்தன.

## பார்வை நூல்கள்

[1] ராதாகிருஷ்ணன், இரா. நீதி நூல்கள் தெளிவுரை, ப.20 (2008).
[2] தங்கமணி, கே.டி.கே. மணிமேகலை ஓர் ஆய்வு, ப.70. (1988).
[3] டாக்டர்.பாலசுப்ரமணியம், சி. வாழ்வியல் நெறிகள், ப.140 (1990).
[4] முனைவர்.கே.சிவக்குமார், இலக்கிய அறிவியல் ப.184 முதல் 187 வரை (2019)
[5] விந்தியா கௌரி, நாலடியார் வாழ்வியல் அறங்கள் (2021).


DOI: 10.30726/ijlca/v12.i3.2025.123003